உ
சிவமயம்

Registered as a 'News-
paper in Ceylon
P. M. G. NO. H. A.
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ௫௫] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஆனிமீ ௨௧௨ (1943 ஜூலைமீ 5 திங்கட்கிழமை) [இல. ௨௫

## ஜெர்மனிமீது கடுமையான குண்டு வீச்சு

### 1 லட்சம் பேருக்கு இருக்கவீடில்லை

லண்டன், யூலை, 2

சென்ற யூன்மாதத்தில் பிரிட்டிஷ் குண்டு விமானங்கள் ஜெர்மனிமீது வெகு உக்கிரமாகக் குண்டுப் பிரயோகம் செய்தன. 15ஆயிரம் டன் நிறையுள்ள குண்டுகள் ஜெர்மன் பிரதேசத்தில் வீசப்பட்டிருக்கின்றன ஜெர்மன் மக்களின் ஒழுக்கம் மிக மோசமாகிவிட்டது. சென்றமாதத்தில் 20 இரவுகளில் ஜெர்மனிமீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பெரிய நகரங்களனைத்தும் குண்டுப் பிரயோகத்துக் கிலக்காகியிருக்கின்றன. இன்னமும் ஜெர்மனிமீது அடுக்கடுக்காகக் குண்டுகள் வீசப்பட்டால் அங்கு கவலைக்கிடமான தன்மையில் உண்மையான நெருக்கடி ஏற்பட்டுவிடும்.

பெர்லினிலுள்ள ஜெர்மன் பிரஜைகள் மிகக் களைத்திருக்கின்றனர். எஸ்ஸெனைச் சேர்ந்த 1லட்சம் ஜனங்களுக்கு வசிக்கக் குடிசையுமில்லை. ஜனங்களுக்குத்தினமொன்றுக்கு 1 பைன்ட் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

## 'இந்தியர் கோரிக்கை நியாயமானதேயாகும்

லண்டன் ஜூலை 2—

நாளை தினம் நடைபெறவிருக்கும் பொதுவுடமைக் காங்கிரஸ் கூட்டத்தில் இந்தியா சம்பந்தமாக ஓர் அவசரத் தீர்மானம் கொண்டுவரப்படும். அது பின்வருமாறு:—

அரசினர் இந்திய மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து வருவதன் மூலமாகவும் தமது அடக்குமுறைக் கொள்கையை அனுஷ்டிப்பதாலும் தங்களுடைய தேசத்தை பாதுகாப்பதில் பங்கெடுத்துக்கொள்வதற்கு இந்தியர்களுக்குப்பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன.

அரசினர் அடியிற்கண்ட நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ளுமாறு வற்புறுத்தப்படுகிறது.

பாஸிஸ்டுக்கு எதிரான அரசியல் தலைவர்களனைவரையும் உடனே விடுதலை செய்யவேண்டும். வெவ்வேறு அரசியல் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுக்கு பரஸ்பரம் சந்திப்பதற்கான வசதிகள் அளிக்கப்படவேண்டும். தற்காலிக தேசிய சர்க்கார் ஏற்படுத்துவதற்கான ஆலோசனையை வரவேற்க வேண்டும். இந்தியத் தலைவர்களுடன் சர்க்கார் பேச்சுவார்த்தை ஆரம்பித்துப் பிரதிநிதித்துவம் பெற்ற இந்தியத் தேசிய சர்க்காரை ஏற்படுத்துவதற்கு வழிவிடுவதுடன் ஐக்கிய தேசங்களுடன் இந்தியாவும் ஓர் நேசநாடாகக் கருதப்பட வேண்டும். வீ—ரி

## அபின்வைத்திருந்த வாலிபனுக்கு அபராதம் 250 ரூபா

சென்றவாரம் யாழ்ப்பாணம் கீழ் நீதிதலத்தில், வின்ஸன்றேமோன்ட் அந்தோனி யென்னும் ஒருவாலிபன் யாழ்ப்பாணப் புகைரதஸ்தான மேடையில், புகைரதம் வரும் நேரத்திலே, ஒரு "பார்ஸல்" எனப்படும் சிறிய பொதியை வைத்திருந்தபோது மதுபரிபாலனப் பகுதிப் பரிசோதகராகிய மிஸ்றர். பதலோமியஞ் சந்தேகங்கொண்டு அந்தப் பொதியை வாங்கிப் பிரித்த போது 4 றூத்தல் நிறைகொண்ட அபின் அதற்குட் காணப்பட்டதெனவும் குற்றஞ் சாட்டப்பட்டான். ஆனால் எதிரி விசாரணையின்போது தான் ஒரு மாணவனெனவும் பிழைப்புததேடிக் கொழும்புக்குப் போகப் புறப்பட்டு நின்ற சமயத்தில் இராசேந்திரமென்னும் இன்னொருவர் குறித்த பொதியைத் தன்னிடத்தில் வைத்திருக்கும்படி தந்து பிறகு எடுப்பதாக வாக்களித்துச் சென்றாரென்றும் அது தனக்குரியதல்லவென்றும் கூறினர். விசாரணை முடிவில் நீதிபதி அந்த எதிரிக்கு ரூபா 250 அபராதம் விதித்தார்.

### 'ஜப்பானின் தோல்வி சுலபமல்ல'

ஆஸ்திரேலியாவிலுள்ள நேசதேச தளமொன்றில் இருக்கும் லெப்டினென்ட் ஜெனரல் ராபர்ட் எய்கல்பெர்ஜர் இத்தாலிய ஜெர்மனி ஸோல்ஜரைவிட ஜப்பானிய ஸோல்ஜர் அதிக சாமர்த்தியசாலி என்றும், அவர்களைத் தோற்கடிப்பது சுலபமல்ல என்றும் தெரிவிததார். 400 அமெரிக்க ராணுவ உத்தியோகஸ்தர்முன்பு அவர் இவ்விதம் தெரிவித்தார். ஒரு லக்ஷம் ஜப்பானியர் சரண்புகுவது சீக்கிரத்தில் நடக்கக்கூடிய காரியம் அல்ல என்றும் அவர்களை இத்தாலியருக்கும் ஜெர்மனியருக்கும் ஒப்பிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். இவர் பரகுவரபோரில் சண்டைபோட்டவர். சென்ற மஹா யுத்தத்திலும் பெருமையடைந்தவர்.

## 'துணிகளைத்தைத்து உடுத்திக்கொள்க'

புடைவைக் கட்டுப்பாட்டுப் பகுதியதிகாரியாகிய மிஸ்ரர் S H உவாடிய என்பவர், சென்ற வாரம் யாழ்ப்பாண நகர மண்டபத்தில், வியாபாரிமார்களையும் ஊரவர்களையும் கொண்டதாகிய ஒரு கூட்டத்திற் பேசியபோது பின்வருமாறு கூறியுள்ளார்:

"இந்தியாவிலே புடைவைவிலை ஏறியேறி வருகின்ற தென்பதை இந்நாட்டு மக்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும்; இந்தியாவிலிருந்தே புடைவை துணிகள் இந்நாட்டிற்குத் தருவிக்கப்படுகின்றன; இந்தியாவில் மக்களுக்கே போதிய புடைவைவேண்டியிருக்கிறது) அல்லாமலும் அவ்வளவோடு அமையாது மத்தியகிழக்குநாடுகளுக்கும் ஆபிரிக்காவிற்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இந்தியாவிலிருந்தே புடைவைகள் இப்பொழுது அனுப்பப்பட வேண்டி நேர்ந்து விட்டது. யுத்த காலத்திற்கு முந்தி இலங்கைக்கு அனுப்பப்பட்டு வந்த புடைவை விகிதத்திற்பாதி விகிதம் இல்லையேற் சற்றுக் கூடிய விகிதந்தான் இப்பொழுது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரலாயிற்று. அதாவது 65000000 யார் கொண்ட துணியே இப்பொழுது வருடமொன்றிற்கு இங்கு அனுப்பப்படுகின்றது. ஆனதினால் இங்குள்ள மக்கள் இயன்றவரையில் துணியைக் குறைத்தே வாங்கி உபயோகிக்க வேண்டும்; அதனோடு பழைய துணிகளைத் தைத்து உடுத்துக் கொள்ளவும் பழகிக் கொள்ளுதல் வேண்டு மென நான உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

### மிஸ்ரர் ஸேஹில் கூறியவை

"வருகிற இலையுதிர் காலத்திற்கிடையில் மத்தித்தரைக் கடலிலும் அயலிடங்களிலும் ஒரு பெரிய யுத்தம் நடத்தல்கூடும்; ஐக்கிய தத்துவராச்சியத்தினராகிய நாங்கள் எங்கள் பகைவர்களாகிய ஜர்மனியரையும் இத்தலியரையும் யப்பானியரையும் எவ்வகையான நிபந்தனையுமின்றிச் சரண்புகச் செய்தல் வேண்டும். அவர்களுடைய வலிமுழுவதையும் கெடுத்து எங்களுடைய நீதியிலும் இரக்கத்திலுமே அவர்கள் தங்கி நிற்கச்செய்தல் வேண்டும்.

### ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக் காரியதரிசி பின்வருமாறு தெரிவிக்கின்றார்:-

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் நிகழும் சுபானு வருஷம் ஆனிமீ 22௨ செவ்வாய்க் கிழமை ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நடைபெறும்.

நிகழ்ச்சிகள்: முற்பகல் 9மணிதொடக்கம்பிற்பகல்2மணிவரை கடவுள் வழிபாடும் திருவாதவூரடிகள் புராணத்தில் திருவடிபெற்ற சருக்கம் படித்தலும், பிற்பகல் 2—3 மாகேசுர பூசையும்.

## தென்னாபிரிக்க துவேஷத்துக்குப் பரிகாரம்

### இந்தியசர்க்கார் உடனே தேடவேண்டும்

கல்கத்தா யூலை 2

அநேக இந்திய வர்த்தக ஸ்தாபனங்களின் சார்பில் பழைய வர்த்தக அங்கத்தவரா யிருந்த திரு.என். ஆர். சர்க்காரின் தலைமையில் கல்கத்தா பிரஜைகளடங்கிய ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தென்னாபிரிக்காவிலிருக்கும் இந்திய துவேஷ மசோதா சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தார் தலையிட வேண்டுமென்றும் தென்னாபிரிக்காவிலிருக்கும் வாயில்லாப் பிராணிகளான இந்திய மக்களுக் கெதிராக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள இந்தக் கடுமையான நடவடிக்கை உடனே நீக்கிக் கொள்ளப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தியாவின் சுயமரியாதை, கௌரவம் முதலியவைகளை நிலைநிறுத்துவதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதோடு தென்னாபிரிக்க இந்தியர்களுடைய உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். குடியாசு அரசாங்கத்துக்கு அறிவித்தும்கூட இந்திய அரசாங்கத்துக்குப் பரிகாரம் கிடையாது போய்விட்டால் தென்னாபிரிக்காவிலிருந்து ஹைக் கமிஷனரை இந்தியஅரசாங்கம் உடனே திரும்ப வரவழைத்துவிடவேண்டுமெனத் தலைவர் என். ஆர். சர்க்கார் வற்புறுத்திக் கூறினார்.

ஐக்கிய தேசங்களில் கலந்துள்ள ஒவ்வோர் தேசத்தினிடமும் நமது ஆட்சேபனையைத் தெரிவிக்க வேண்டும். ஒருதலைப் பட்சமான இந்தச் சட்டசம்பந்தமாக ஐக்கியநாடுகளைத் தலையிடுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்.

திரு. சர்க்கார் இறுதியாகப் பேசுகையில் நமது சொந்த நாட்டுக்குத் தேசியவிடுதலை கிடைக்கும் வரையில் தூரப்பிரதேசத்திலுள்ள நமது நாட்டு மக்கள் பலவிதமான அகௌரவங்களைத் தொடர்ந்து அனுபவித்துத்தான் ஆகவேண்டு யெனக் கூறினர். வீ—ரி

### சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூரிலா?

சுபாஷ் சந்திரபோஸ் யப்பானிலிருந்து சிங்கப்பூருக்கு ஆகாயமார்க்கமாக வந்திருக்கின்றாரென்றும், தொக்கிய நகரிலே இருந்த காலத்தில் அவர் யப்பானிய பிரதம மந்திரியாகிய ரொஜோவையும், யப்பான் அந்நியநாட்டு மந்திரியையுங் கண்டு பேசியுள்ளாரென்றும் யப்பான் சமாசாரத்தைக் கொண்டு அறியக்கிடக்கின்றனவாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுவரு
ஆனிமீ உகவ திங்கட்கிழமை

## அற்பபகையென அலட்சியஞ் செய்யவொண்ணுது

பிருத்தானியரும் அமெரிக்கரும் தம் இரு பெரும்பகைவராயுள்ள ஜர்மனியர் ஜப்பானியரென்பவர்களுள் முதல்ஜர்மனியரைத் தோல்வியுறச் செய்துவிட்டபின் ஜப்பானியரைத் தோற்கடிக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டிருக்கிறார்கள். இது பிருத்தானிய பிரதம மந்திரியாகிய மிஸ்றர். ஸேர்ஜில் முன்னர்ச் சிலமுறை கூறியவற்றைக் கொண்டும் அறியத்தக்கது. ஆனல் இப்பொழுது யப்பான் சம்பந்தமாக வெளிவருஞ் சமாசாரங்களை உற்று ஆராயுங்கால், யப்பானியரும் இந்த ஓய்வு நேரத்திலே தம்மைப் பெலப்படுத்துவதோடும் தாம் கைப்பற்றிய நாடுகளை ஸ்திரப்படுத்துவதோடும் மாத்திரம் அமையாது அவுஸ்திரேலியா போன்ற நாடுகளைக் கவருதற்கும் வேண்டிய முயற்சிகள் செய்கின்றனரென யூகிக்கக் கிடக்கின்றது. ஜர்மனியரைக் காட்டிலும் யப்பானியரைத் தோல்வியுறச் செய்து அடக்குவதே ஆவசியகமெனவும் தாம் கைப்பற்றிய இடங்களில் ஜப்பானியர் பெருந்தொகையான சைநியத்தை வைத்திருக்கிறார்களெனவும் ஜர்மனியரிடத்தில் அவ்வளவு அதிக படைவலியில்லையெனவும் சீனசேனுபதியின் மனைவியார் முன்னர் முறையிட்டுள்ளார். இதுமாத்திரமல்லாமல், சமாசாரப் பத்திரிகைகளின் அதிகாரியாகிய மிஸ்றர். ரேய்ஹோவாட் என்பவரும், யப்பானியர் பலமற்றவர்களென்றும் அவர்களை இலகுவில் தோல்வியுறச் செய்துவிடலாமென்றும் ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் எண்ணியிருத்தல் பெருந்தவருக முடியுமென இப்பொழுது தெரிவித்துள்ளார். "யப்பானியருடைய படைவலி அதிகம். யப்பானியருடைய தன்மையை மேலைத்தேசவாசிகள் உள்ளபடி இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை; 1918–ம் ஆண்டு மகா யுத்தத்திலே ஜர்மனியரைத் தோல்வியுறச் செய்த விதமாக, யப்பானியரைத் தோல்வியுறச் செய்யலாமென ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் எண்ணியிருப்பது புத்தியாகாது; வலிமையுள்ள ஒருதத்துவராச்சியத்தினரைத் தோல்வியுறும்படி முறியடிப்பது எவ்வளவு கஷ்டமோ, யப்பானியரை அடிப்பதும் அவ்வளவு கஷ்டமாகும் என்று மேற்படி பத்திரிகைப் பகுதி அதிகாரி ஐக்கிய தத்துவ ராச்சியத்தினரை எச்சரிக்கின்றார்.

இவை இவ்வளவில் நிற்க, சைமன்ஹறல்ட் ஸிமித் என்னுமொருவர் "டெயிலி மெயில்" என்னும் பத்திரிகையில் யப்பானுடன் மாறுபட்டுச் சமர்புரிவதும் யப்பானியரைத் தோல்வியுறச் செய்வதும் அமெரிக்கரைக்காட்டிலும் பிருத்தானியர் மீதே பொறுத்த கடனுகுமென்கிறார். யப்பானியர் அமெரிக்கரைக்காட்டிலும் பிருத்தானியருக்கே அதிக நஷ்டம் விளைத்துள்ளனரென்பதும் யப்பானியரையடக்கினுலொழியப்பிருத்தானியராகிய தாங்கள் ஆசியாக்கண்டத்திலே அதிகாரஞ் செலுத்துதல் முடியாதெனவும், சீனத்திலுள்ள தானங்களிலிருந்து புறப்பட்டுப் பிருத்தானிய ஆகாயப்படை யப்பானிற் குண்டுமாரி பெய்து பர்மா நாட்டை மீட்டுக்கொண்டு சீனதேசத்துட் புகுந்து அவர்களுடன் சேர்ந்து யப்பானியரோடு சமர்புரியவேண்டுமெனவும் குறித்த சிமித் என்பவர் தெரிவிக்கின்றார்.

பிருத்தானியரும் யப்பானியரும் பரஸ்பரம் மாறுபட்ட பிறகு யப்பானியர் பிருத்தானியருக்குப் பெரும் அனர்த்தங்களை விளைத்து வருகிறார்களென்பது பலரறிந்த இரகசியம். பிருத்தானிய சக்கிராதிபத்தியத்திலே கிழக்குப்பாகத்தில் வசிக்கும் பிரசைகள் பஞ்சப்படுதற்கும் பலவகையிற் கஷ்டப்படுதற்கும்யப்பானியருடைய பகைமையே காரணமெனச் சொல்லுதல் தவறுகாது. ஆனதால் அமெரிக்கருடன் சேர்ந்தாக, சேராது தாமேயாக யப்பானியரை எங்கள் பிருத்தானியர் விரைவிற் சமர் செய்து அடக்கி உலகசமாதானத்தை ஆக்கிவிடுதல் ஆவசியகமாகும். நெருப்புப்பொறி அற்பமானதுதானே யென்றெண்ணி அதனை அவித்தலின்றி எள்ளிவிடுவோர் எவருமில்லையாம்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

### பெண்பிள்ளைகளுக்குப் பிரத்தியேகமான கலாசாலை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபையார் பெண்பிள்ளைகட்கும் அதிக செலவின்றிச் சைவ முறையில் ஆங்கிலக்கல்வியூட்ட வேண்டுமென நோக்கங்கொண்டாராய் இற்றைக்குச் சில வருடங்கட்குமுன் இந்துக்கல்லூரியிலேயே பெண்பிள்ளைகளையுஞ் சேர்த்துக் கல்வியூட்டிவித்து வந்தார்கள்; முதல்வருட வகுப்புத் தொடக்கம் மற்றிக் வகுப்பு வரையிற் சிறுமியர் இக்கல்லூரியிற் பயின்று பரீட்சைகளிலுஞ் சித்தியெய்திவரலாயினர். இப்பொழுது இக்கல்லூரியிற் பல வகுப்புகளிலுஞ் சேர்ந்து கல்விபயிலும் சிறுமியரின் தொகை நூற்றைம்பதுவரையில் ஆகிவிட்டமையினுலும் பெற்றோர் பலர் கேள்விப்படியும் பெண்பிள்ளைகட்கெனப் பிரத்தியேகமான கலாசாலையை மேற்படி அதிகாரிகள் அமைக்க நிர்ணயித்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அணித்தாக, மேற்படி கல்லூரி விளையாட்டு மூன்றிலுக்குக் கிழக்குப்புறத்தே ஒரு பெரிய இல்லத்தைச் சமயோசிதமாக வித்தியாசாலையின் பொருட்டு ஒழுங்குசெய்துள்ளனர். பிரத்தியேகமான இக்கலாசாலை இந்த யூலாய்மாசம் 12உ திங்கட்கிழமை குறித்த கட்டடத்தில் ஆரம்பமாகுமென அறியலானேம். இப்போதைக்கு இக்கட்டடத்தில் ஆரம்பஞ்செய்துகொண்டு இதற்கென பிறக்ரர் திரு. இ. சிவகுருநாதரவர்களாலும் அவர் பாரியாராலும் தருமசாதனஞ் செய்யப்பெற்றதும், வண் கிழக்கிலுள்ளதுமாகிய நடுததோட்ட மென்னும் பெயர்கொண்ட விஸ்தாரமான காணியில் மேற்படி சபையார் விடுதிச்சாலையோடு கூடிய சிறந்த கலாசாலை யொன்றைக் காலகதியில் அமைக்க உத்தேசித்திருக்கின்றனர். இறைவனருளால் இத்தூய தொண்டு விரைவில் நிறைவேறுக. எப்பொருட்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் இந்த யுததகாலத்திலே மேற்படி அதிகாரசபையார் தங்கள் சிரமம், ஏனைய வசதியீனங்களைப் பொருட்படுத்துதலின்றி இத்தூயதொண்டில் ஈடுபட்டிருத்தல் பாராட்டற்பாலது. "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுல் முடியும்" என்பது பெரியோர் வாக்கு. ஆனதால் இப்பெண்கள் கல்லூரியும் இனிது நிறைவெய்தி விளங்கும் வண்ணம் தங்கள் தங்களால் இயன்ற பொருளை மனப்பூர்வமாக உதவுதல் சைவாபிமானிகள் கடனுமென்க.

## இந்திய அரசியல் நிலைமை

### துருக்கியர் மனேபாவம்

இந்தியாமீது துருக்கியர் கொண்டுள்ள மனேபாவம்பற்றி "டைம்ஸ்' நிருபர் கூறுவதாவது:—

இந்தியாவிலிருந்து திரும்பிவந்துள்ள துருக்கி பத்திரிகைக்காரர்கள் எழுதியுள்ள கட்டுரைகள் அங்குள்ள நிலைமைபற்றிப் பொது மக்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. பட்சபாதமின்றி வெவ்வேறு கட்சியினரது அபிப்பிராயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனல் பலதரப்பட்ட வகுப்புக்களும் பாஷைகளும் பழக்க வழக்கங்களும் மத நம்பிக்கைகளும் துவேஷங்களும் இந்திய மக்களிடையே இருப்பதனுல் இந்திய பிரச்னையை நிவர்த்திக்க அவைகள் முட்டுக்கட்டையாயிருக்கின்றனவென்று வற்புறுத்தப்படுகிறது.

ஹிந்து, முஸ்லிம்களிடமிருக்கும் சில விசித்திரமான குணங்களைக் கண்டு துருக்கியர் ஆச்சரியமடைந்தனர். அடாடர்கை இந்தியர்கள் மிகவும் மெச்சியபோதிலும் விடுதலைக்காக அடாடர்க் மிகவும் போராடினதையே இந்தியர் அதிகமாக மெச்சினர். ஆனல 20 வருடங்களில் அடாடர்க்கு அரசியல் சமூக துறைகளில் சீர்திருததம் செய்ததை இந்தியர்கள அறியவில்லை, அலலது வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டனர்

— சுதேசமித்திரன்.

## யுத்தம் இன்னும் இரண்டு மூன்று வருடம் நிகழுமா?

அமெரிக்கரும் பிருத்தானியரும் சேர்ந்து இரண்டு மூன்று வருடகாலத்திற்குக் கடுஞ்சமர் புரிந்தே உலகப் [illegible] பையும் பொரு[illegible] நிலையையும் நிலைப்படுத்தி வைத்தல் முடியுமென்று அமெரிக்க கடற்படைச் சேனுபதியாகிய 'கேணல்' விருய்ங் நொக்ஸ் என்பவர் தெரிவிக்கின்றார்.

## இடி முதலியவற்றால் இறந்தவர்கட்குத் தகனுதி கருமங்கள் செய்யும் நியமம்

(பிரம்மஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள், சுதுமலை)

"துன்மாண காரணந்தான் சொல் விடுங்காலிடியிற்
றணிந்து புலப்பட லரவின்மேல் விழுதல் சுவர்விழ்
முன்மதித்து வீழ்ந்திடல்வெந் தீயினிடை வீழ்தன்
முனையுள்ள வாயுததின் மலைமரத் தின் வீழ்தல்
வன்மனத்தால் விடம்பருக லாதிகளா லிவற்றான்
மரித்தவனுக் கிருமூன்று மாதத்தி னுதல்
பின்மருவோர் வருடத்தி னுதறருப் பையினுற்
பிடித்துருவஞ் சுகமரணம் போற்ற கனமியற்றே"

என்னும் பிரமாணத்தினுல் இடிவீழ்ந்திறத்தல், பாம்புகடித் திறததல், சுவர் வீழ்ந்திறத்தல் அக்கினியில் வீழ்ந்திறத்தல், ஆயுதத்தினுலிறத்தல், மலையிலேறி வீழ்ந்திறத்தல், மாததிலேறி விழுந்திறத்தல், நஞ்சுண்டிறத்தல் ஆதியவைகளாலிறந்தவர்கட்கு ஆறுமாதத்தினுதல் ஓர்வருடத்தினுதல் தருப்பை அல்லது பலாசு இவறறால் உருவஞ் செய்து சுகமரணம் போற்றகனஞ்செய்து, பாஷண ஸ்தாபனம், பிரபூதபலி, நவ சிராத்த முதல் சபிண்டீகரணம் வரையுமுள்ள கிரியைகளை குறித்த குறித்த நாட்களிலே செய்யவேண்டுமென்பதே முறை. அப்படியானவர்களை உடனே சுமந்திரமாகதகனம்மாத்திரஞ் செய்தபின்பே ஆறுமாதம் ஓர் வருடத்தில் முன் காட்டியபடி தகனஞ் செய்து ஏனைய கருமங்களைச் செய்க.

வள்ளி கடியவிட மாதிகளாற் காத்திரத்தை விடுக்குந் துன்மரணமடைந்தாலும் நியமித்ததை விடுத்தோன் சொல்லவருமெ கோளமெனுடு மூர்ககன் பொய்யோடன் கன்மரணம் பெறறுலும் அக்கினிதான் மெய்முழுதும பற்றி வெந்துருகி மசானததில் வெண்பலியாமளவில்,

என்னும் நியாயத்தால் அவனுடைய தேகம் முழுதும் எரிந்து சாம்பராகும் வரையுமே ஞாதிகட்கு ஆசௌசமாம். எனவே உடன சுததியாம்.

## அனுராதபுரம் விவேகானந்தசபை

இச்சபையின் வருடாந்த மகா கூட்டம் சென்ற யூன்மீ 24ந் தேதி மேற்படி சபை மண்டபத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில்நிகழவிருக்கும் வருடததிற்காகிய உத்தியோக அங்கத்தவர்களுள் கீழ்க் காட்டப்படுவோர் தெரிவு செய்யப்பட்டனர். அபிமானப் போஷகர் திரு. G. G. பொன்னம்பலமவர்கள்; இலங்கை அரசாங்க சபைப் பிரதிநிதி. அவைத்தலைவர்: V. இராமசாமி யவர்கள் பிறக்ரர்; காரியதரிசி திரு. A. சிவக்கொழுந்து அவர்கள் பிறக்ரர்; தனதிகாரி திரு. செல்வததுரை அளவைப் பகுதி உத்தியோகததர்.

—நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபவாதம்

சென்னையிலிருந்து வெளிவரும் மாதவெளியீடாகிய "ஆனந்த போதினி"யின் இந்த ஆனிமாசப் பிரசுரத்தில் ஒருவர் "துரை" என்னும் புனைபெயருடன் தாம் எழுதிய 'மகளிரைப் பழிப்பது தகுமா" என்னும் வியாசத்தின் அடிக்குறிப்பில் இந்துசாதனப் பத்திராசிரியர் மீது ஒரு அபவாதம் சுமத்தியுள்ளார்; அக்குறிப்பு வருமாறு:-

"இக் கட்டுரையை, நான் 1934ம் ஆண்டில், தமிழ்ப் பேரறிஞர்-மணி. திருநாவுக்கரசு முதலியார் ஆசிரியராயிருந்து நடத்திவந்த 'தமிழரசு'என்னும் இலக்கியத் தமிழ்ப் பத்திரிகையில் எழுதி யிருந்தேன். இக்கட்டுரை வாயிலாக நான் எழுப்பியிருந்த ஐயவினாவுக்கு என்ன காரணத்தாலோ விடை கிடைக்கவில்லை. இந்நிலையில் இக்கட்டுரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'இந்து சாதனம்' என்னுந் தமிழ் வாரப் பத்திரிகையில் 24-5-34ந் தேதி இதழில், 'பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளா?' 'அடிமைகளா யிருப்பது ஆண்டவனின் திருவுளமா?' 'சுயநலப் புலிகளது போலிக் கொள்கைகள்' 'வில்லி புத்தூரர் பெண்களைப்பற்றிக் கொண்டுள்ள கருத்து என்ன!' என்றெல்லாம் பல தலைப்புகளுடன் வெளிவந்தது. ஆனால், அதில் என் பெயர் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக, புலோலி: பண்டிதர் தி. க. கந்தையாபிள்ளை என்று பொறிக்கப்பட்டிருந்தது. 'தமிழரசு' பத்திரிகாசிரியர் அப்பத்திரிகையைக்காட்டி விஷயத்தைத் தெரிவித்தபோது, எனக்குப் பெரு வியப்புந் திகைப்பும் ஏற்பட்டது. நடந்த விஷயம் இதுதான். நான் 'தமிழரசி'ல் எழுதியதை, யாழ்ப்பாணத்திலுள்ள பண்டிதர் தி.க.கந்தையாபிள்ளை அப்படியே 'காப்பி'யடித்து எழுதி 'இந்துசாதனத்'தில் வெளிவருமாறு செய்துவிட்டார். இதில் ஆச்சரியமென்னவென்றால், இந்துசாதனம் பத்திரிகாசிரியர் முன்பின் கவனியாது வெளியிட்டதுதான். இக் கட்டுரை யாழ்ப்பாணத் தமிழரின் உரைநடையாக இல்லாததைக் கூட அவர் கவனிக்கவில்லை. தமிழரசு காரியாலயத்தார் தங்கள் பத்திரிகையில் வந்த விஷயத்தை வேறொருவர் பெயரால் வெளியிட்டது முறையா? என்று கேட்டுச் சமாதானங் கூறுமாறு கடிதம் விடுத்தனர். அதற்கு இந்துசாதனம் பத்திரிகாசிரியர் பதிலே எழுதவில்லை. ஆனால், இந்துசாதனம் 4.6.34ந் தேதி இதழில், வதிரி தேவரையாளிச் சைவ வித்தியாசாலை சி. வல்லிபுரம் என்பார் மேற்குறித்த கட்டுரைக்கு எழுதியிருந்த மறுப்பு வெளியிடப்பட்டிருந்தது. இவ்விதம் என் கட்டுரை யாழ்ப்பாணம் பண்டிதரொருவரால் கவரப்பட்டு வெளிவந்தாலும், நான் எழுப்பிய ஐயவினாவுக்கு அறிவுடைய விடைகள் வருமானால் சரிதான் என்று எண்ணி ஆறுதலுற்றேன். ஆனால், ஒருவருடைய ஆட்சேபத்துடன் அது நின்றுவிட்டதால் என் அறிவுத் தாகம் அடங்கவில்லை. ஆகவே, நான் காணும் தமிழறிஞர்களையெல்லாம் இப்பாடல் பற்றி அபிப்பிராயங் கேட்பதுண்டு. என் மனம் திருப்தியேற்படும்படியாக இதுவரை யாரும் எனக்குப் பதில் சொல்லவில்லை. திடீரென உணர்ச்சி தூண்டப்பெறவே, இக்கட்டுரையை 'ஆனந்தபோதினி'க்கு அனுப்பலானேன். அறிஞர்கள் தங்கள் கருத்தைத்தெரிவித்து என்னுடைய ஐயத்தைத் தெளிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்"

இக்கட்டுரை இற்றைக்கு 9 வருடங்களுக்கு முன்னர் வெளிவந்ததாகும்; இக்குறிப்பிலே மேற்படி கடிதர் காட்டிய ஏனைய ஏதுக்களைவிட்டு நாம் யாதுங் கூறவரவில்லை. "இந்துசாதனப் பத்திராசிரியர் முன்பின் கவனியாது வெளியிட்டதுதான்" என்பதும், "இக்கட்டுரை யாழ்ப்பாணத்துத் தமிழரின் உரைநடையாக இல்லாததை அவர் (பத்திராசிரியர்) கவனிக்கவில்லை" என்பதும், தங்கள் பத்திரிகையில் வந்த விஷயத்தை வேறொருவர் பெயரால் வெளியிட்டது முறையா என்று தமிழரசுக் காரியாலயத்தார் கடிதம் விடுத்தபோது இந்துசாதனப் பத்திராசிரியர் பதிலே எழுதவில்லை" என்பதுமே நாம் ஆசங்கைப்படுவது.

தமிழரசுக் காரியாலயத்தார் இந்த விஷயமாக இற்றைக்கு 9 வருடங்கட்குமுன் இந்துசாதனப் பத்திராசிரியருக்கு ஒரு கடிதமெழுதினார்களென்பதற்கு ஆதாரமென்ன? அப்படியான கடிதம் எக்காலத்திலாயினும் இந்துசாதனப் பத்திராசிரியருக்குக் கிடைக்கவில்லையென்பதைத் திடமாகச் சொல்லுதல் முடியும். தமிழரசுக் காரியாலயத்தார் விடுத்த கடிதத்திற்கு இந்துசாதனப் பத்திராசிரியர் விடை எழுதாதபோது, குறித்த கடிதர் இப்பத்திரிகையாசிரியருக்கு நேரில் ஒரு கடிதமெழுதிச் சமாதானஞ் சொல்லும்படி பத்திராசிரியரைக் கேட்டிருக்கலாமே; அந்தச் சமயத்திலும் இந்துப்பத்திராசிரியர் பதிலெழுதாது மௌனஞ் சாதித்திருந்தால் அதன்பின் "பத்திராசிரியர் பதிலெழுதவில்லை" என்று இக்கடிதர் ஆனந்தபோதினியில் வெளியிட்டிருக்கலாமே?

இனி, குறித்த கட்டுரை யாழ்ப்பாணத்தமிழரின் உரைநடையாக இல்லாததைக்கூட இந்துசாதனப் பத்திராசிரியர் கவனிக்கவில்லையென்கிறார்; அவர் கூறுவதிற் சிறிது உண்மையுண்டென்பதை நாம் ஒருவாறு ஏற்றுக்கொள்ள வேண்டியது மெய். ஆனால் இக்காலத்திலே குறித்த தி. க. கந்தையாபோன்ற போலிப்பண்டிதர்கள் சிலர் யாழ்ப்பாணத்துள்ள அறிஞர் எழுதிவருகின்ற தூய தமிழ் வசனநடையைவிடுத்து, கல்வியறிவு நிரம்பாத தென்னிந்தியத் தமிழ்மக்கள் சிலரினுஞ் சிலர் எழுதிவரும் விபரீதத் தமிழ்வசனநடையைப் பின்பற்றித் தாமும் எழுதத் தலைப்பட்டுக்கொண்டனர்; அதனாற்றான் பத்திராசிரியர் பேதமுறாது அவ்வியாசத்தை, இப்பத்திரிகைக்கென வெளியிடும்படி எழுதிய வியாசமென்றெண்ணி ஏற்று வெளியிடவேண்டி நேர்ந்தது. அந்த வியாசத்தைத் தமிழரசுப் பத்திரிகையில் இப்பத்திராசிரியர் அக்காலத்திற் கண்டிருந்தால், அதுவதித்து இப்பத்திரிகையில் வெளியிட்டிருக்கமாட்டாரென்பது நிசம்; குறித்த வியாசம் இப்பத்திராசிரியருக்காகவே அனுப்பப்பட்டு வெளியிடத்தகுந்தொன்றல்லவென்பது படிப்போரெவர்க்கும் நன்கு புலப்படும். குறித்த புலோலிப்பண்டிதரைப்போல, இற்றைக்குச் சில வருடங்கட்குமுன்னர் இன்னுமொரு "பண்டிதர்" இந்தியாவிலுள்ள ஒரு பத்திரிகையில் வெளிவந்த வியாசமொன்றைத் தாமெழுதியதாகப் பாவித்துத் தம்பெயரைப் பொறித்து இப்பத்திரிகையில் வெளிவரச் செய்துவிட்டார். ஆனால் அவருடைய வஞ்சனையை யறிந்த பிறிதொரு கடிதர் உண்மையை இப்பத்திராசிரியருக்கு எழுதித் தெரிவிக்கவே, அவ்வுண்மையுடனே பத்திரிகையில் வெளியிடப்பட்டது. அவரைப்போல் இந்த "துரை" என்னும் புனைபெயர் பூண்ட கடிதரும் தமது முறையீட்டை இந்துசாதனப் பத்திராசிரியருக்கு நேரில எழுதியிருந்தால் இந்த விபரீதமெல்லாம் நேர்ந்திருக்கமாட்டா. குறித்த கடிதர் தாம் எழுதிய வியாசத்திற்கு, இப்படிச் செய்தலால் மகத்துவமபெறச் செய்யலாமெனச் சிந்தித்தனர் போலும்.

விளம்பரமின்றேல்
பெரும் [illegible]

# நால்வர் நான்மணி மாலை

(பண்டிதர் சிவஸ். கருணாலயபாண்டியனார் அவர்கள், வாஞ்ஞெலியில் நிகழ்த்திய சொற்பொழிவு)

(முற்றொடர்)

ஆளுடைய நம்பியார் முதலைவாயினின்றும் பார்ப்பன மகவை மீட்டவரலாற்றை நுண்பொருளோடு ஒப்புமை கொளுவியது நன்கு பொருத்தமுடைத்து. ஆளுடைய நம்பியாரை அழைத்து அருட்கடலே! உடலென்னுங் குளத்திலே ஆணவமலம் என்னும் முதலைவாயில் அம்முதலை விழுங்கிய அழிவில்லாத உயிரென்னும் பார்ப்பன மகனைத் திரோதான சத்தியென்னுங் கூற்றுவனாலே யதார்த்தமென்னுங் குளக்கரையில் உமிழச்செய்து அவ்வுயிராகிய சிறுவனைச் சிவமென்னுந் தந்தையோடு சேர்த்தல் வேண்டுமெனக் கேட்குமழகு மறக்கற்பாலதன்று. மற்றைத் தொண்டர் சிலர் தாம் செயற்கருஞ் செயல்செய்து ஆட்பட்டனர். திருவாதவூரடிகள் ஒருசெயலுஞ் செய்யாதிருப்பச் சிற்றம்பலவாணன் தானேபாடுபட்டு அவரை ஆட்கொண்டனென அடிகளின் பெருமையை வியந்து பாடுமகவற்பாவிலே அறுபத்துமூன்று நாயன்மார்களுள்ளும் பதினான்கு நாயன்மார்களையும் அவரவர்களின் வியத்தகு பணிகளோடு எடுத்தோதியிருக்கிறார் நான்மணி மாலையாசிரியர்.

'மகிழ்ச்சி மிகவுண்டு போலு
மெதிர்வந்து
புகழ்ச்சியொடு சேரும் போது—
நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையும் தண்
புகலிச் சம்பந்தர்
தந்தையினும் பால்கொடுத்த
தாய்க்கு'

எனவரும் வெண்பாவிலே பிள்ளையார் பாடும்பொழுது அவர் தந்தையாகிய இறைவனுக்குண்டாகும் மகிழ்ச்சியைககாட்டிலும் தாயாகிய இறைவிக்கு உண்டாகும் மகிழ்ச்சி மிக்கிருக்குமெனக் கூறியது 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்னுந் திருக்குறட்பாவை நினைப்பூட்டுகின்றது. வேதாரணியத்திலே ஆளுடை வேந்தர் அடைபட்டிருந்த திருவாயிற்கதவு திறக்கப்பாடிய செயலில் ஒரு நுட்பமான கொள்கை விளக்கப்பட்டுள்ளது. அஃதாவது தானென்னு[illegible] கோயில். அதிலே கோயில்வாயில. அதனை மூடியிருக்குங் கதவே ஆணவமலம். அக்கதவைத் திறந்து அக்கோயிலினுள்ளே சிவம்பெருமானைக் கண்டு வணங்குவதற்கு அப்பர் காட்டுவதொன்பது கங்கையாறு தலைசேர்ந்த பெருமானுக்கு அருட்கடல் நீர்முகந்த மாணிக்கவாசகமென்னுமுகில் பொழிந்த திருவாசகமென்னும் பெருமழைநீர் ஆறாகப் பெருக்கெடுத்து அதனைப்பாடிப் பயில்வாருடைய உள்ளமெனும் நல்ல குளத்திற் புகுந்து நிறைந்து அவருடைய நாவென்னும் மதகின் வழியாக வெளியபோந்து அதனைப் பாடக் கேட்போருடைய செவியெனும் வாய்க்கால் வழிபோய் அக்கேட்போரது உள்ளமெனும் பண்படுத்திய வயல்களிற்பாய அவ்வயல்களிலே விதைத்த திருவடியன்பு என்னும் விதையினின்றும் சிவமெனும் நென்முளை தோன்றி வளர்ந்து திருவருளாக விரிந்து முற்றி வீடுபேறாகிய பயனைக் கொடுக்குமெனத் திருவாதவூரடிகளின் சிறப்பைப் புலவருளங் களிகூருமாறு புனைந்து பாடி மகிழ்கின்றார் சிவப்பிரகாசர். உலகிலே வாழும் பெரியார் செய்யும் வியத்தகு தெய்வச் செயலெல்லாவற்றுள்ளும் தலைசிறந்த பெருஞ்செயல்கள் [illegible]அடிகள் மூவருஞ் செய்தருளிய மூன்று செயல்களேயாம். அவையாவன: பிள்ளையார் எலும்பைப் பெண்ணாக்கியது, அப்பர் கடலிலே கல்லைத் தோணியாக மிதக்கச் செய்தது, நம்பியார் முதலையுண்ட பிள்ளையை வரவழைத்தது. இவை மூன்றுந் தம்முள் ஒன்றற்கொன்று உயர்ந்தனவு மிழிந்தனவுமாகாது நேரொப்பனவாகும் என்றிவ்வாறு நான்மணிமாலையால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

'கொள்ளை கொள்ள விடுதவிக்
கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா—
வெள்ளமிடும்
ஏடேறப் பால்குறைந்த தென்ற
மூவரேகழுவின்
காடேறப் புக்கவருகர்''

எனவரும் அழகிய வெண்பாவினுள் 'ஏடேறப் பால் குறைந்தது' என்னுந் தொடர் பிள்ளையார் ஆற்றிலேயிட்ட தேவார ஏடு எதிரேறிப் போக அமணரெல்லாம் தம் நல்லூழ் குறைந்துபோயிற்றென்று நொந்து அழுவார் எனப் பொருள்பட்டுக் காய்ச்சும் ஆன் பாலிலே பாலாடை மிகவும் உண்டாகி மிதப்பதனாலே ஆன்பால் அளவிலே குறைந்து போயிற்றென்று அழும் மடவோராவார் என்னுங் கருத்துக் கொண்ட பழமொழியுமாய் நின்று சுவைபயந்து நிற்கின்றது. 'கொள்ளை கொள்ள விடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத் தள்ளும்' என்றது தந்திருமணப்போதில வந்திருந்தோரையெல்லாம் கோயிற் பேரொளியிற் புகச்செலுத்தி நின்று இறுதியிற் பிள்ளையார் தாமும் தம மனைவியாருடன் வீடுபெற்ற காட்சியை உள்ளத்தில அமைத்துப் பார்ப்பார்க்கு மிக நயமாயிருக்கும்.

'நலமலி வாதவூர் நல்லிசைப்
புலவ!
மனநின் றுருக்கு மதுர வாசக!!
கலங்குறு புலனெறி விலக்குறு
வீர
திங்கள் வார்சடைத் தெய்வ
நாயகன்
ஒருகலை யேனு முணரா
னென்றோ
கைகளோ முறிபடுங் கைகள
காணிற்
கண்களோ வொன்று காலையிற
காணும்
மாலையி லொன்று வயங்கித்
தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி
னெரியும்
ஆயினுந் தன்னை நீபுகழ்ந்
துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின
னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மகிழ்ச்சி யுறயா வெண்பணி
வானே'

என்னுமினிய செய்யுளிலே திருவாசகத்தை அழகிய திருச்சிற்றம்பலமுடையானன்றோ எழுதியது. அவ்விறைவன் தானே எழுதமுடியாத பல குறைபாடுடையவனாயிற்று. அவனால் அஃதெங்ஙனம் எழுத முடிந்தது? அவன் தற்புகழ்ச்சியில் மிக விருப்புடையவனெனத் தெரிகின்றது. அதனாலன்றோ தன்னைப் புகழ்ந்து பாடுந் திருவாசகத்தை எவ்வாறோ தானே எழுதிவிட்டான். இவ்வளவு புகழ்ச்சி விருப்பமிருந்தும் பிறரிகழ்தலையறியாமல் எலும்பு முதலியவற்றை யணிந்திருக்கின்றானே. இவன் அறிவு இருந்தவாறென்னையெனப் புனைந்துரைத்தது எத்துணை நகையும் அன்பும் இன்பும் விளைக்கின்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நால்வர் நான்மணி மாலை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. இப்பாட்டிலே ஒருகலையனு மூணாரனென்றது ஒரு கல்வியையும் அறிந்திலன் என ஒலியால் இகழ்ச்சிப்பொருளும் ஒரு கல்வியாலும் உணரப்படானெனக் கருத்தினாற் புகழ்ச்சிப் பொருளுந் தந்து நின்றது. கைகளோ முறிபடுங் கைகள் என்றது ஒடிந்த கைகள் என ஓசையால் இகழ்ச்சிப் பொருளும் சுவடியேடு இருக்குங்கைகள் எனக் கருத்தினாற் புகழ்ச்சிப்பொருளுங் காட்டி நின்றது. இறைவனுக்குக் கண்கள் ஞாயிறு, திங்கள், நெருப்பு என மூன்றாமென்பது பற்றி ஒருகண் காலைப்பொழுதிற் காணும் எனவும் ஒருகண் மாலைப் பொழுதிற் காணும் எனவும் ஒரு ஒரு கண் விழிக்கும் பொழுது எரியும் எனவும் புனைந்தது பொருந்துமாறுணர்க.

'வானும் புகழ்புகலி மன்னன்
றொடர் போன்று
தேனுந் திதழியோன் சீரோடு—
தானுங்
கரியாய் மொழியுங் கரியாய்
விடாமல்
எரியா ரழல்வீழ்ந் தெழுந்து'

எனவரும் அருமை வெண்பாவிலே "தானும்" என்ற எச்சவும்மையாற் பிள்ளையாரொடு ஒட்டிய வழக்காட்டிலே அமணர் நெருப்பிலே போட்ட ஏடு கரியாய் நம்பெருமானது மாட்சியையுணர்த்து மென்பர். அவாறியார் என்னை? அதுவேயன்றிப் பிள்ளையார் நெருப்பிலே போகட்ட ஏடுதானுங் கரியாய் உணர்த்திற்றெனக் குறிப்புப்பொருளொன்றுங் கூற்றுப்பொருளொன்றுமாகத் தானுங்கரியாய் மொழியுமெமென்று சொன்ன சொன்னயம் வியந்து பாராட்டத்தக்கது.

துடைவாழை மேன்மடவர்
ரல்குற் பாம்பு தொடமயங்கி
கடைவாய் பிணமெனப் பட்டார்
பெறுகிலர் நஞ்சுகுலை
யுடைவாழை மேனூர கந்தீண்ட
மாய்ந்த வொருவனுயி
ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக்
கரசினையே'

என்னும் பாட்டிலே வாழையின் மேலிருந்த பாம்பு தீண்டி இறந்து பிணமான மூத்த திருவாவுக்கரசினை யுயிர்ப்பித்தருளினர் திருநாவுக்கரசு நாயனர் அதனாலே பெண்களின துடையாகிய வாழையின் மேலிருக்கும் அல்குலாகிய பாம்பு தீண்டி இறந்து கூடப்பிணமாயினரையும் திருநாவுக்கரசு நாயனரை யடையச் செய்தால அவ ரவரை யுயிர்ப்பித்துப் பிழைப்பித்தருள்வாரோ. ஏன் அவரவரை அடைகின்றிலர் என இரக்கமுற்றுக்கூறிற் செய்தி எத்துணை விழுப்பமுடைத்து. 'பகிர் மதி தவழும்' என்னும் பாவிலே வாதவூரனபர் இறைவன்பாற் பேரருள்நிறையப்பெற்றிருக்கும் பெருந்தார்போல அழுவாரெனவும் யான் பெறுதிருந்தும் பெற்றார்போலக் களித்துக் கவலையின்றி யிருப்பேன் எனவும அதனாலே தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் செப்பிய

"நன்றறி வாரிற் கயவர் திரு
வுடையர்
நெஞ்சத் தவல மிலர்" என்னும்

பொய்யாமொழிப் பொருளைக் கண்கூடாகக் கண்டேன் எனவுங் கூறிய கூற்றுக்களுள் வாதவூரரைப்பற்றக் கூறியது பொருத்தமுடைத்தாயினுஞ் சிவப்பிரகாச முனிவர் தம்மைப்பற்றிக் கூறியது சிறிதும் ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. எனினுஞ் சுவையுடைத்து. எல்லாரும் ஓதுதற்குரியதாற் பெற்ற திருவாசகம் எல்லாருந் தீண்டுதற்குரிய பொற்கலமொக்கும்; பிறரோது மியற்கையில்லாத பார்ப்பனமறை பிறர் தீண்டக்கூடாத மட்கலமொக்கும்; அன்றியும் திருவாசகமோதினால் வீடுபேறு கிடைக்கும். வேதமோதினால் அறமேகிடைக்கும்; அதனாற் பயனாலும் வேதத்தினுஞ் திருவாசகமே விழுமியது என ஒப்புநாடிக் கூறிய வுண்மைக் கூற்றுச் சிவப்பிரகாச முனிவர் கற்றோர்க்குத் தாம் வாம் பாகிய தலைமைய ரென்பதனைத் தெளிவிக்கும்.

"அறத்தா றிதுவென வேண்ட
சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடையை
மறுத்தார் சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்
மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து"

என்னும் வெண்பாவிலே பல்லக்குச் சுமப்பது முற்பிறப்பில் அறஞ்செய்யாமையின் பயன், பல்லக்கேறுவது அறஞ்செய்ததன்பயன்; இவ்வாறு அவ்வவற்றின்பயன் கண்கூடாகக் காணப்படுவதுகொண்டு உடல்விட்டுச் செல்லுமுயிரோடு அறமும் உடன்செலலுமாதலால் உடல் பொன்றினும் அறம்பொன்றாது என்பது உணரப்படும் என்னும் பொருள்படக் கூறிய பொய்யாமொழியும் ஞானசம்பந்தர் ஏறிய பல்லக்கைச் சுமக்கப்பெற்ற திருவாளரிடம் பொய்த்துப் போயிற்று எனப் புனைந்துரைத்த நுண்ணுணர்வு கிடைத்தற்கரியது. திருக்குறளை மறுப்பவர் மூவுலகினுமில்லை; அங்ஙனமாகவுஞ் சிவப்பிரகாசமுனிவர் மறுப்புக்காட்டினாரென்பது புலவர்க்கு அளவிறந்த மருட்கையும் பின்பு அளவிறந்த உவகையும் உண்டாக்குவதாகும்.

"செல்வநல் லொற்றியூரன் செய்ய
சங் கிலியாலார்த்து
மல்லலம் பரவைதன்கண் மாழ்குற
வமிழ்த்துமேனும்
அல்லுநன் பகலு நீங்கா தவன்
மகிழடியிலெய்தி
நல்லவின் படைந்திருப்ப னம்பியா
ரூரன்றானே"

இப்பாட்டிலே ஒற்றியூரனாகிய சிவபெருமான், தன்னைச் சங்கிலியாற் கட்டிக் கடலிலே அமிழ்த்தினாலும் நம்பியாரூரன் கடலடியில் இன்பமடைந்திருப்பான் எனவும் அப்பெருமான், தன்னைச் சங்கிலி நாச்சியாராலே அகப்படச்செய்து, பரவை நாச்சியாரிடம் அவரது வெகுளியால் மயங்கி வருந்துமாறு செய்தாலும் நம்பியாரூரன்தான் சங்கிலியாரை மகிழமாதனடியில் மணங்கூடி யின்புற்றிருப்பான் எனவும 'மகிழடி' யென்பதற்குச் சிவபெருமான திருவடி யெனப் பொருள்கொண்டு அவன் அங்ஙனம் வருந்துமாயினும் அவனது திருவடியில் அமைந்து நல்லவின்பம் நுகர்ந்திருப்பான் எனவும் பல பொருள்படக் கூறியது அறஞுக்குப் பெருவிருந்தாகும். "பெருமிழலைக் குறும்ப நாயனர் பற்றற்ற பெருந்துறவி; அவ்வளவு பெரியார் நின திருவடியைப் போற்றி மலர்தூவி வழிபடுகின்றார், அங்ஙனமிருப்ப நீ இரு காதலியரொடு முயங்கினால் நினது பெருமை என்னுவது? அதற்காக நின்னை வெறுப்பது கூடாது. ஏன்? நின்னை யாட்கொண்ட உடையவன் செயலே உனக்குமாயிற்று. அது முறைதானே. என நம்பியாரிடம் கேள்வி கேட்டுக்கொண்டு அக்கேள்விக்கு முனிவர் பெருமானர் தாமே கண்ட விடையொழி ஓதுவார் உள்ளபுக்கு நிலவுவதாகும்"; இன்னும் அறிவுக்கடலாகிய அடிகள் தமது நால்வர் நான்மணிமாலையிலும் பிற பாடலிலும் புதைத்துவைதத வைப்புப்பொருளைக் கண்டெடுத்தாள வலைபெறுறி நால்வரது திருவருளை யுடையார்க்கன்றிப் பிறர்க்கு முடியாது. இத்தகைச் சிறந்த நால்வர் நான்மணிமாலையைத் தேவார திருவாசகங்களுக்கு ஒரு சுருக்கமான பாயிரமாகக்கொண்டு பொன்னே போற்போற்றி வழிபடல் சிறந்தது.

"தானே முத்தி தருகுவன் சிவன
வன்
அடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற கட்டவல்
லார்க்கே"

நால்வர் திருவடி வாழ்க. சிவப்பிரகாச முனிவர் திருவடிவாழ்க.

## தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை ஸ்தாபகர் ஞாபகதினம்

மேற்படி வித்தியாசாலைத் தாபகர் ஞாபகதினம் நிகழும் சித்திரபானு வருஷம் ஆனி மாதம் 10-ம் திகதி (24-6-43) வியாழக்கிழமை மாலை 7½ மணியளவில், வடபகுதி வித்தியாதரிசி திரு. S. U. சோமசேகரம் B. A, அவர்களின் தலைமையில் தேவார பாராணத்துடன் ஆரம்பமாயிற்று. பின்னர் மாணவரொருவரால் வந்தனோபசாரப் பாக்கள் படிக்கப்பட்டன. அதன்பின் காலஞ் சென்ற திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களது தன்னலங் கருதாத் தனிப் பெருந் தொண்டை வியந்து, உணர்ச்சி ததும்ப அக்கிராசனர் அவர்களால் ஓர் அரிய பேச்சு நிகழ்த்தப்பட்டது. அப்பேச்சில திரு. சு நடேசபிள்ளை அவர்களது கல்வித் திறனையும், இந்நாட்டவர்க்குப் பல துறைகளிலும் தம்நலங் கருதாது அவர் உஞற்றும் அருந் தொண்டுகளையும்எம்மவரிலும்பார்க்கத்தென்னிலங்கைச் சிங்களச் சகோதரர் சிலர் தமக்கு வியந்து கூறியுள்ளார்கள் என்று குறிப்பிட்டார். அதேபோன்று காலஞ்சென்ற திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை யவர்களது அளப்பருஞ் சேவைகளைப் பற்றியும் இந்நாட்டவரிலும் பார்க்கப் பிறநாட்டவர்கள் அதிகம் விதந்து கூறுவது நூதனமல்லவென்றுங்கூறினர். பின்னர் கல்வி பயிற்றுவதிற் பெற்றோர்களுக்கு இருக்கும் பொறுப்பை யிட்டு திரு. K. நேசையா M. A அவர்கள் ஒரு பொருட்சுவை பொலிந்த விரிவுரை நிகழ்த்தினர். அதன்பின் பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலை ஆசிரியர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் ஸ்தாபகரால் யாக்கப்பட்ட 'கீதாசமஞ்சரி' யென்னும் நூலிலிருந்து சில செய்யுட்களைப்பாடி அவற்றின் நயத்தினை வியந்து பேசினர். பின்னர் வித்துவான் திரு. P. சிவப்பிரகாசம் அவர்கள் 'மாணவர் உலகம்' என்னும் விஷயத்தை யிட்டுச் சபையோர் மெச்சும்படி ஓர் சிறந்த உபந்நியாசம் நிகழ்த்தினர். அதன் பின் தலைவர் வேண்டுகோட்படி, மேற்படி தாபகரின் நன்மதிப்பை ஞாபகப்படுத்துவதற்குச் சான்றாகச் சபையோ ரெல்லோரும் இரு நிமிஷம் எழுந்து நின்றனர். தலைவர் பின்னுரையின்பின் நியாயதுரந்தரர் திரு. M. சிதம்பரநாதன் அவர்களால் நன்றி உரைகள் கூறப்பட்டன. அதன் பின் பென்ஷர் திரு. S. நடராசா அவர்கள் முனசிபசபை வரை அனுவதித்து நன்றியுரை கூறினர். கூட்டம் இரவு 10 மணியளவில் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவெய்தியது.

—கடித


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)



குறைந்த விலையில்
# துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பகுதி:

# அழகர் கிள்ளைவிடு தூது

[ க. கி. ந. ]

I

கோவை, உலா, தூது, பிள்ளைத் தமிழ் முதலியவைகள் தமிழில் பிற்காலத்தெழுந்த பிரபந்தவகைகளுட் சிறந்தவை. அவற்றுள்ளும் தூது என்னும் வகையைச் சேர்ந்த நூல்கள் மிக்க புதுமை நிறைந்தவை. தூதுநூல்கள் வடமொழியில் சந்தேசங்களென்றும் தூதகாவ்யங்களென்றுஞ் சொல்லப்படும். வடமொழியிலுள்ள தூதகாவ்யங்களில் காளிதாச மகாகவியால் இயற்றப்பெற்ற மேகஸந்தேசம் கற்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இனிமைவாய்ந்தது. இதுவே வடமொழியில் முதன்முதல் உண்டான தூதுநூல் என்று அறிஞர் கூறுகின்றனர். இதனைப் பின்பற்றிப் பல தூதகாவ்யங்கள் வடமொழியில் உண்டாயின என்றும், அவ்வாறே அவற்றைப்பின்பற்றி ஏனைய மொழிகளிலும் தூதுநூல்கள் யாக்கப்பட்டன வென்றுந் தெரிகிறது. உலக வழக்கிலும் தலைவன் தலைவியர்க்கிடையேயும் ஸ்நேகர்களுக்கிடையேயும் பகையரசர்களுக்கிடையேயும் தூது அனுப்பப்படும் வழக்கம் இன்றும் உளதன்றோ? காவியங்களிலும் (உதாரணமாக, இராமாயணம், பாரதம், கந்தபுராணம் முதலியவற்றில்) . அங்கதன் தூது, கிருஷ்ணன்தூது, வீரவாகு தேவர்தூது முதலியன கூறப்படுகின்றனவன்றோ? தூதின் இலக்கணங்கள் திருக்குறளிலும் கூறப்பட்டிருத்தலைக் காண்கின்றோம். இவையெல்லாம் அரசியல் சம்பந்தமான தூதுகள். தலைவன் தலைவியர் தங்களுக்குள் தூதுவிட்ட சம்பவம் நைடதத்திற் கூறப்படுகின்றது. நளன் தமயந்தியிடம் அன்னத்தைத் தூதுவிட்டான் என்று கூறக் கேட்கின்றோம். செந்தமிழ்க் காப்பியங்களிற் சிறந்துவிளங்குஞ் சீவக சிந்தாமணியில் அக்காப்பியத் தலைவனுகிய சீவகன்பால் குணமாலை என்னும் தலைவி கிளியைத தூதாக அனுப்பினள் என்று கூறப்படுகின்றது. அச்செய்யுள்களை எண்டுத் தருதும்.

"உய்யு மாறுரை யுன்னை யலா
விலேன்
செய்ய வாய்க்கிளி யேசிறந்
தாயென,
"நைய னங்கையிந் நாட்டகத்
துண்டெனிற்
றைய லாய்சம ழாதுரை"
யென்றதே.

தெளிக யம்மலர் மேலுறை
தேவியின்
ஒளியுஞ் சாயலும் ஒப்புமை
யில்லவள்
களிகொள் காமத்திற் கையற
வெய்தித்தன்
கிளியைத் தூதுவிட் டாள்கிளந்
தென்பவே

பூணு டேந்திய வெம்முலைப்
பொன்னனுள்
நாணுந் தன்குல னுக்கலங் கிழ்ப்பட
வீணை வித்தகற் காணிய விண்படர்ந்
தாணுப் பைங்கிளி யாண்டுப்
பறந்ததே"

தலைவன் தலைவியர்க்கிடையே கிள்ளையைத் தூதுவிட்டதாக அமைந்த பகுதிகள் நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு என்பவற்றிலுங் கிடைக்கின்றன. தேவாரத்திலுங் கிடைக்கின்றன.

"சிறையாரும் மடக்கிளியே யிங்கே வா" என்றற் றொடக்கத்துத் தேவாரம் முதலியனஎடுத்துக்காட்டாகும். திவ்யப்பிரபந்தத்திலும் அத்தகைய பாடல்கள் உள்ளன என்று கூறுப.

இங்கெல்லாம் தூதுவிடப்படுவனவாக அமைக்கப்படும் பொருள்கள் (கிள்ளை, பூவை முதலியன) உண்மையில் தூதாகச் சென்று வரவேண்டுமென்பது அப்பாடல்களை ஆக்கிய புலவர்களின் கொள்கையன்று. அன்றி, அது நிகழத்தக்கது மன்று. "காமமிக்க கழிபடர் கிளவி" எனத் தொல்காப்பியம், இறையனுர் அகப்பொருள் முதலிய நூல்களிற் பேசப்படும் வகைகளுள் இதுவும் ஒன்றெனவே கொள்ளுதல் வேண்டும். இது புலவன் தனது கவித்திறத்தைக்—கற்பனைத் திறனைக் காட்டுதற்கு நிலைக்களனுக அமைத்துக்கொள்வதன்றி உண்மையில் நிகழ்வதன்று என்பது வெளிப்படை.

தூது என்றால் என்ன என்று வரைவிலக்கணங்கூறப்புகுந்த இலக்கண விளக்கச சூத்திரகாரர்,

"பயிறருங் கலிவெண் பாவி னுலே
உயர்திணைப் பொருளையும் அஃறி
ணைப் பொருளையும்
சந்தியில் விடுத்தல் முந்துறு தூதெ
னப்
பாட்டியற் புலவர் நாட்டினர்
தெளிந்தே"

என்று கூறுதல் காண்க.

இனி, தூது விடுதற்குரிய பொருள்களாவன: 1. அன்னம், 2. மயில், 3. கிள்ளை, 4. மேகம், 5. பூவை, 6. பாங்கி, 7. குயில், 8. நெஞ்சு, 9. தென்றல், 10. வண்டு என்னும் பத்துமேயாம் என்பது பிரபந்தத்திரட்டு, இரத்தினச்சுருக்கம் என்னும் நூல்களின் கருத்தாகும். எனினும், இவையல்லாத பொருள்களும் பிற்காலத்துத் தூது விடுதற்குரிய பொருள்களாகப் புலவர்களால் அமைத்துக் கொள்ளப்பட்டமைக்குப் பணவிடு தூது, துகில்விடுதூது, தமிழ்விடு தூது, மான்விடு தூது, வனசவிடு தூது, சவ்வாதுவிடுதூது, நெல்விடு தூது, விறலிவிடுதூது என்னும் நூல்களே சான்று பகரும்.

ஆயின், கிள்ளையோ மேற் குறித்த இரு நூல்களிலுங் கூறப்பட்ட பத்துப் பொருள்களுள் ஒன்ருக அமைகின்றது. கிள்ளைவிடு தூதுகளும் பல தமிழில் யாக்கப்பட்டிருக்கின்றன. எனினும், அவற்றுள் முதன் முதல் யாக்கப்பட்ட தூது நூல் இவ் அழகர்கிள்ளைவிடு தூதே என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அவ்வாற்றானும் இந்த நூல் சிறந்த நூலேயாம். அன்றியும் அஃறிணைப் பொருள்களுள் கிளி, ஒருவாற்றால் பேசும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றது. அதனால் அதைத் தூதுவிடுவதாக அமைத்தல் மற்றையவற்றை அமைத்தலினுஞ் சிறந்ததன்றோ? இந்நூலுள்ளும் ஆசிரியர் சிலேடை பொருந்த,

—"கிளிப்பிள்ளை
சொன்னதைச் சொல்லுமென்று
சொல்லப் பெயர் கொண்டாய்
பின்னதைப் போலுமொரு பே
றுண்டோ?"

என்று அழகாகக் கூறுவர். இங்கு சொன்னதை என்றசொல் கொல்லியதை என்று ஒரு கருத்தும் தங்கத்தை என்று மற்றொரு கருத்தும் பயந்து இன்பந் தருகின்றது. பின் அத்தைப் (அதனைப்) போலும் ஒரு பேறுண்டோ? என்று கேட்கின்றார் புலவர் இன்னும் அன்னத்தையும், மயிலையும், வண்டையும், தென்றலையும், மேகத்தையும், காக்கையையும் தூது விடுதலினும் பார்க்கக் கிள்ளையைத் தூதுவிடுதல் சிறந்ததென்பதை இந்நூல் 103-ம் அடி தொடக்கம் 204 -ம் அடி வரை ஆசிரியர் கூறும் இனியகருத்துக்களாலும் கிள்ளை தூதுப் பொருளாதற்குச் சிறந்ததென்பதைக் காண்பாம். அதனைப் பின்னர் எடுத்துக் காட்டுதும். நிற்க.

இத் தூது, திருமாலிருஞ் சோலைமலையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமானை (அழகரை)க் காமுற்ற தலைவி ஒருத்தி அவரிடம் ஒரு கிளியைத் தூது விட்டதாகப் பாடப்பெற்றதாகும்.

இத்தூதை இயற்றியவர் இற்றைக்கு ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முன் மதுரையில் வசித்த பலபட்டடைச் சோக்கநாதக் கவிராயர் என்பவராவர். இவர் பாக்கள் பத்திரசந் ததும்புபவை; உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை; தெரிந்தெடுத்த இனிய சொற்பிரயோகமும் பொருட்டெளிவும் பொருந்தியவை. இவர் இத்தூது மாத்திரமன்று, தென்றல் விடுதூது என மற்றொரு தூதும் இயற்றியுள்ளார். தேவை உலா என ஓர் உலாவும் மும்மணிக்கோவை ஒன்றும், யமக அந்தாதி ஒன்றும் இவரால் இயற்றப் பெற்றன. இவர் திருவிளையாடற் புராணஞ் செய்த பரஞ்சோதிமாமுனிவர் காலத்தவர் என்ப. இனி, நூலுள் நுழைந்து இப்புலவர்தஞ் செய்யுட் டிறனையும் நயங்களையும் நோக்குவாம்.

## தென் ஆப்ரிக்கா காங்கிரஸ்

### பிளவு சரிப்பட வில்லை

தென் ஆப்ரிக்காக் காங்கிரஸில் மிகவும் முக்கியமான கூட்டம் திங்கட்கிழமை இரவு முடிந்தது, இதில் ஒற்றுமையின்மையே வருந்தத்தக்கதாக இருந்தது. அபிப்பிராயபேதம் பெரிய பிரச்னைகளில் எழும்பவில்லை. அற்ப விஷயங்களிலேயே அது தலை காட்டியது. ஸ்ரீ ஸொரப்ஸிர ஸ்டாம்ஜியும் டாக்டர் டாடுவும் காங்கிரஸ் கூட்டத்தில கலக்காதது விசனகரமாகும்.

ஆயினும், காங்கிரஸ் கூட்டத்தில் சில யுவர்கள் முன்வந்து விவாதத்தில் அதிகசிரத்தையும் உத்சாகமும் காட்டியது திருப்தி தருவதாகும். பிரசங்கங்கள் யாவும் ரஸமாக இருந்தன.

1939 முதற்கொண்டு அதிகம் விவாதிக்கப்பட்ட ஒரு விஷயம் முடிவாக்கப்பட்டது. நத்தால காங்கிரஸ் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

புதியதென்னுபிரிக்கா சங்க ஸ்தாபனத்தை நத்தால் காங்கிரஸ் சார்பில் பேசிய யுவர்களும் ஆதரிக்கவில்லை. அவர்கள் அதை எதிர்க்கின்றனர். ஆயினும், ஸ்ரீ ரஸ்டாம்ஜியும் ஸ்ரீ நாயுடுவும் மிஸ்டர் காட்ப்ரேயும் சாமான்யமானவர்கள் அல்ல வாதலால புதியசங்கம் ஸ்தாபிதமாகாது என்று நாம் கூறமுடியாது.

ஆப்ரிக்கர்கள், மலேயர்கள், மற்றும் இதர வர்ண ஜாதியார்கள் ஆகியோருடன் காங்கிரஸ் சேர்ந்து கொண்டு ஒருமுகமாகப் போராடும் விஷயமாகப் பொறுப்பை நிர்வாகக் கமிட்டியிடமே காங்கிரஸ் ஒப்படைத்தது. இந்த விவாதத்தின் போது ஜனுப் இஸ்மாயிலும் மிஸஸ் குலுவும் சிறந்த பிரசங்கங்களைப் புரிந்தனர். இதில் சற்று எதிர்ப்பு தலைகாட்டியதால் மேலும பிளவு ஏற்படுமோ என்ற பயம் ஏற்பட்டது. ஆகவே, நிர்வாகக் கமிட்டி விரும்பினுல் இதர ஜாதியாருடன் சோலாம் என்ற முடிவு செய்யப்பட்டது. நடைச் சட்டம் மிகவும் பலமாகக் கண்டிக்கப்பட்டது. பீல்ட்மார்ஷல் ஸ்மட்ஸ் நிதி மந்திரி மிஸ்டர் ஹாப்ஷயர் ஆகியோரைத் தாக்கிப் பலர் பேசினர். பார்லிமெண்டில் இருந்த கேப்டவுன் பிரதிநிதிகளும் மசோதாவை எதிர்க்காமல் இருந்ததற்காகக் கண்டிக்கப்பட்டனர்.

இந்தியரில் பெரும்பாலாருக்கு ஒரு புதிய சங்கட நிலைமை ஏற்பட்டது. பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸை அவர்கள் அதிகம் வெறுக்கிறபோதிலும் யுதத முயற்சியில் பின்வாங்க விரும்பவில்லை. அச்சுநாட்டுத் தோல்வியையே அவர்கள் விரும்புவதால் அடுத்துவரும் தேர்தலில ஸர்க்காரை ஆதரிக்க உத்தேசித்திருக்கின்றனர் கேப்டவுனில் மட்டும் பொதுவுடைம வாதிகளுக்கு அவர்களது ஆதரவு கிடைக்கும்.

ஹைகமிஷனர் ஸர் ஷாபத் ஆமத் கானின் பிரசங்கத்துடன் காங்கிரஸ் கூட்டம் முடிந்தது. இந்தியரிடையே கொள்கையில் வித்தியாசம் இல்லை என்றும், அவர்கள் யாவரும் ஒன்றுபட வேண்டுமென்றும் ஒற்றுமை இராவிட்டால் சிறிதளவுகூட அவர்களது ராஜீய சமூக பொருளாதார நிலைமை அபிவிருத்தியடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த காங்கிரஸ் இதற்கும் எட்டுவருஷங்களுக்கப்பால் கூடாது என நான் நம்புகிறேன். அதில் நான் பிரசன்னமாகியிருப்பது பற்றியும் தற்போது ஒன்றும் கூறமுடியாது என்றார் அவர்.

"இந்திய உரிமை சாஸனம்" ஒன்றைத் தயாரித்து அதை பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸிடம் சமர்ப்பிக்கவேண்டும் என மிஸ்டர் நாறு கூறினர். இதில் பிரஜா உரிமைகளின் அவசியம் வற்புறுத்தப்பட்டு, பல தடைகளின் நீக்கமும் முக்கியமாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். இந்தக் கோரிக்கைகள் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளில் பிரசாரத்தைக் கமிட்டியார் நடத்தவேண்டும் என்றும், யுதத்திற்கப்புறம் தேசத் தலைவர்களிடமும் முறையிடவேண்டும் என்றும் அவர் கூறினர்.

—சுதேசமித்திரன்.

## மகோற்சவம்

புராதன புண்ணிய தலமாகிய மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயிலில் வருகிற புதன்கிழமை (7-7-43) துவஜாரோகணமாகிமகோற்சவம் நடைபெறும்.

## நல்லூர் சட்டைநாத சுவாமி கோயில்

இப்புராதன சிவாலயத்தில் சென்ற புதன்கிழமை (30-6-43) கொடியேறி மகோற்சவம் நடைபெறுகின்றது; வருகிற வியாழக்கிழமை (8-7-43) இரதோற்சவமும் அடுத்த நாளாகிய ஆனியுத்தர புண்ணிய தினத்தன்று தீர்த்தோற்சவமும் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோயில்களில் தாசியர் நடனம்

இந்துசாதனப் பத்திராசிரியருக்கு:-

ஐயா!

இக்காலம் எங்கள் சைவக் கோயில்களிற் கொடியேறித் திருவிழா நடக்குங் காலமென்பது தங்களுக்குத் தெரியும்; இந்தப் பஞ்ச காலத்திலும் தூயமுறையில் நடக்குஞ் சில கோயில்கள் தவிர, இங்குள்ள ஏனைய கோயில்களிலெல்லாம் பழையபடி தாசியர் நாட்டியம் நடத்தப்படலாயிற்று. அநாவசியமானதும் தீமை பயப்பதுமான இந்த நாட்டியத்தின் பொருட்டு, உற்சவ உபயஞ் செய்வோர் பெருந்தொகைப் பணத்தை வீணே செலவுசெய்கிறார்கள்; இவர்கள் செய்யுஞ் செயல குளிக்க என்று போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வோர் செயல்போலானதே! திருவிழா உபயம் நடத்துவோர் சிலரை "இந்த அக்கிரமம் ஏன் அப்பா என்றுகேட்டால் அவர்கள் தாசியர் நடனம் சாத்திரத்திலே சொல்லப்பட்டதுதானே; ஆதலால் அதனைச் செய்யத்தானே வேண்டுமென அடாத ஞாயம் பேசுகிறார்கள். சாத்திரத்திலே சொல்லப்பட்ட உருத்திர கன்னிகையர் இந்தப் பொதுப்பெண்கள் தானா? என்று திருப்பிக் கேட்டால், அந்தக் காலத்திற்கு அவர்கள் இந்தக்காலத்திற்கு இவர்கள் என்று தாட்சேபஞ் செய்கிறார்கள். உற்சவ காலத்திலே திருக்கோயிலில் நடக்கவேண்டிய அபிஷேகம் விசேஷ ஆராதனை முதலிய கிரியைகள் விஷயத்திலே உலோபஞ் செய்கிறார்கள்; ஆனால் தாசியர் பொருட்டு மாத்திரம் எவ்வளவு பணம் கேட்டாலும் மனப்பூர்வமாகக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள்.

ஐயோ! ஐயா, இப்போது மகளிர் பொருட்டு அள்ளிக்கொடுங்குங் காசை, குறித்த குறித்த கோயில்களிலே முற்றாத திருப்பணியில் ஒரு பாகத்தையாயினும் முற்றுவித்தற்கும் உற்சவ தினத்திற் கோயில் மண்டபத்திலே சைவ ஒழுக்கம் வாய்ந்த அறிஞரைக் கொண்டு சற்பிரசங்கம் செய்வித்தற்கும் செலவிட்டாற் பெரும் புண்ணியமாகாதா? மேலும் ஏழைச் சனங்கள் வயிறார உண்ணுதற்கு உணவின்றிப் பசியால் வருந்தும் இந்த ஆபத்தான காலத்திலே தாசியர்பொருட்டு இறைக்கும் பணத்தைக்கொடுத்து அரிசி காய்பிஞ்சு வாங்கி ஏழைகளுக்கு ஒருவேளைக்காயினும் வயிறு நிரம்ப அன்னதானஞ் செய்யவொண்ணாதா? கொஞ்சக்காலமாகக் கண்மூடிக் கொண்டிருக்கும் ஆண்டவனே! நீயாவது இவர்கள் மனம் நல்லவழியில் திரும்புவதற்கு அருள் புரியவொண்ணாதா?

சைவாபிமானி

---

## மருதானையில் கோர விபத்து

### தொழிலரளி ஒருவர் மரணம்

மருதானையிலுள்ள ஒரு தொழிற்சாலைக் கிடங்கில் நேற்றுப் பிற்பகல் வேலை செய்துகொண்டிருந்த சில தொழிலாளிகள்மீது அங்கிருந்த ஒரு இரும்புச் சட்டம் விழுந்ததன் விளைவாக ஒருவர் உடனே கொல்லப்பட்டாரென்றும் இன்னொருவர் படுகாயமடைந்தாரென்றும் மூன்றுவது தொழிலாளி சொற்ப காயத்தோடு தப்பிவிட்டாரென்றும் தெரிகிறது.

பிரஸ்தாப சட்டம் இரும்புக் குழாய்களாலானதென்றும் அந்த சட்டத்தின்மீது பெருஞ்சுமையான இரும்பு ஏற்றப்பட்டிருந்ததென்றும் நண்பகல் வேளையில் திடீரென்று அந்த இரும்புச் சட்டம் பெருமுழக்கத்தோடு கீழே வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளரின்மீது விழுந்துவிட்டதென்றும் விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது.

பிரஸ்தாப இரும்புச் சட்டத்துக்குக் கீழே அகப்பட்டுக்கொண்டவர்கள் அதன் உடைந்த பாகங்களுக்குக் கீழகப்பட்டிருந்தபடியால் அவர்களுக்கு வெளியிலிருந் துதவிசெய்ய முடியாது போகவே ஒரு ரட்சிப்புக் கோஷ்டியும் ஆரம்ப சிகிச்சைக் கோஷ்டியும் இரண்டு அம்புலன்ஸுகளும் அனுப்புமாறு மருதானை ஏ. ஆர். பி. டிப்போ வேண்டிக்கொள்ளப்பட்டது. ரட்சிப்புக் கோஷ்டியினர் வந்தபின்பும் இரும்புக் குழாய்களின் பாரம் காரணமாக அவைகளை அகற்ற முடியாது போய்விட்டது. ஆகவே அந்தக் குழாய்கள் அறுக்கப்பட்ட பின்பே ரட்சிப்புக் கோஷ்டியினரால் காயமடைந்தவர்களை நெருங்க முடிந்தது.

மிகப் பலமாகக் காயமடைந்த அந்தோனி பெரேரா என்ற தொழிலாளி பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செலலும்போது மரணமடைந்தார் பலதத காயமடைந்திருந்த குணதாஸா என்ற இன்னொரு தொழிலாளி பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் சொற்ப காயமடைந்த ஸமி என்ற தொழிலாளி சிகிச்சை செய்யப்பட்டு அனுப்பப்பட்டார்.

—தினகரன்

---

## யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு

யாழ்ப்பாணத்திலே நடந்தேறும் ஆடிச்சுப்பிறீம்கோடு 5ந் திகதியாகிய திங்கட்கிழமை ஆரம்பமாகும். நீதியரசர் ஜயதிலகை வந்து விசாரணை நடத்தவிருக்கிறார். இப்போது விசாரணைக்கிருக்கும் வழக்குகள் ஏழுவரையிலாகும்.

---

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் யூலை 6

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 டி சௌடையா வயலின்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஸி வி ஆர் எம் கிருஷ்ணையர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கே கே சிவராமன் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கே கே சிவராமன் வீணை 5.45 இசைப்பயிற்சி 6 ஸி வி ஆர் எம் கிருஷ்ணையர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாமம்யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ரோஹிணி இசை நாடகம் 8 மதராஸில் உள்ளபடி (பி எஸ் வேதாசலம் பாட்டு) 9-15 காந்திலால் சோபனு சமர்த்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 டி ஜி சங்கர கோபாலன் புல்லாங்குழல் 10 ஐரோப்பிய சங்கீதம்† 10-30 முடிவு.

### புதன் யூலை 7

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே லக்ஷ்மணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே லக்ஷ்மணன்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 டி கே ஜயராமய்யர் வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 எம் எஸ் விஜயாள்பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6–40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்யக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள்7-45 சீனுவின் தீரம் யுத்தநிகழ்ச்சி 8 எம் எஸ் விஜயாள் வானொலி வாத்யகோஷ்டியுடன் 8-30 அமெரிக்கவாத்ய டேல்லி அஞ்சல் 8-45 டி கே ஜயராமய்யர் வயலின் 9 20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல் 10 மதராஸில் உள்ளபடி 10–30 முடிவு.

### வியாழன் யூலை 8

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலைகீதம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 W S ராமநாதன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் ஆர் கிருஷ்ணையர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 என் ஆர் கிருஷ்ணையர் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 W A ராமநாதன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 திருச்சி வாத்யகோஷ்டி 8 சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஆங்கில நிகழ்ச்சி † 10 ஐரோப்பிய சங்கீதம் † 10-30 முடிவு.

---

## பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதந் தொடக்கமாக
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்

**தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்**

சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச்
சிறிது உயர்த்தியுள்ளார்:-

| | | | |
|---|---|---|---|
| இந்துசாதனம் தமிழ்ப்பிரதி, | வருடமொன்றிற்கு | பட்டின எல்லையுள் | 6.50 |
| ,, ஆங்கிலப்பிரதி | ,, | ,, | 6.50 |
| இரு பிரதிகளுஞ் சேர்த்து | ,, | ,, | 10.50 |
| தமிழ்ப்பிரதி | ,, | பிறவூர்கட்கு | 9.50 |
| ஆங்கிலப்பிரதி | ,, | ,, | 9.50 |
| இரு பிரதிகளுஞ் சேர்த்து | ,, | ,, | 13.50 |

**தனிப்பிரதி 7 சதம்**

---



## சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கிகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.
(Q. 30. 11-5.43—10-8.43)

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

## விளம்பர விகிதம்

### முதன் முறைக்கு

| | |
|---|---|
| ஒரு கலம் ரூபா 10-00 | அரைக்கலம் ரூபா 5-50 |
| கால் கலம் ரூபா 4-00 | ஒரு அங்குலம் ரூ. 1-00 |

**அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி**

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 5, July, 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org